தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1981 ஜனவரி 30.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன் அறிந்துதேர்ந்து கொளல்''

நீதி நெறிகளை அறிந்து, அனுபவம் கனிந்த பெரியோரின் நட்பைத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு கொள்ளும்போது, அந்தப் பெரியோரின் தகுதிக்கு ஏற்றபடி அவரிடம் நடந்து கொள்ள வேண்டிய முறையை ஆராய்ந்து அறிந்து, அவரைத் துணையாகக் கொள்ளவேண்டும்.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. கே. கோட்டிரெட்டி மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. கோட்டி ரெட்டி அவர்கள், 27-1-1981 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1887 வது ஆண்டில் திரு. கே. கோட்டி ரெட்டி அவர்கள் பிறந்தார். 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரையிலும், மற்றும் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையிலும், மேலும் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1.10.1953 வரையிலும், கடப்பா பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றி உள்ளார். மேலும், 1923 ஆம் ஆண்டிலிருந்து அன்றைய சென்னை சட்ட மன்ற மேலவையின் உறுப்பினராகவும், 1926 ஆம் ஆண்டிலிருந்து 1930 ஆம் ஆண்டு வரையிலும் சட்டமன்ற மேலவையில் சுயராஜ்யக் கட்சியின் துணைத் தலைவராகவும், மற்றும் 1946-47 இல் திரு. பிரகாசம் அவர்களின் அமைச்சரவையில் அமைச்சராகவும் இருந்தார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்)

2. அறிவிப்புகள்.

(அ) விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு மௌன அஞ்சலி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளின் நினைவாக இன்று நாடு முழுவதிலும் இரண்டு நிமிட மவுன அஞ்சலி செலுத்தப்படுகிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். 10.58 மணிக்கு, மணி ஒலி ஒலித்தபின் எழுந்து நிற்கவேண்டும். இராணுவத்தினரின் முதல் குழல் ஒலியும், நீத்தார் அஞ்சலி குழல் ஒலி வீரவணக்கமும் (last post) முடிந்தபின் பதினொரு மணி முதல் பதினொரு மணி இரண்டு நிமிடம் வரை இரண்டு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நின்றபடியே அஞ்சலி செலுத்தப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, இன்று முக்கியமான தினமாக இருப்பதாலும் தீண்டாமை ஒழிப்பு நாளாக அறிவித்திருப்பதாலும் அவையை 10.30 மணிக்கு ஒத்தி வைத்து மீண்டும் 11 மணிக்குக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே அலுவல் ஆய்வுக் குழுவிலே இதுபற்றி முடிவு எடுத்தோம் இங்கே வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவிலே மாற்றம் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு முதல்வர் அவர்களும் மற்றவர்களும் தீண்டாமை ஒழிப்பு நாளானதால் பிரமாணம் எடுக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களும் கலந்து கொள்வது நல்லது என்றும், தேவைதான் என்றும் என்னிடம் வந்து பேசினார்கள். அப்படியென்றால் 10-45-க்கு ஒத்திவைத்து 11-15-க்கு வந்துவிடலாம்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: அவையிலேயே வைத்துக் கொள்ளலாம் என்று சர்வகட்சித் தலைவர்கள் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே சொன்னார்கள். அவர்களைக் கேட்டாமல் முடிவு எடுப்பதா?